விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 20 ரபியுல் 3 இதழ் 268

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 6-11-1986

புதிய வரவுசெலவுத்திட்டம்

## பாதுகாப்பு அமைச்சுக்கு 1070 கோடி ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, புதன் நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் 7200கோடி ரூபா செலவீனமாகவும் 4350 கோடி ரூபா வருமானமாகவும் காட்டப்பட்டுள்ளது.

மிகுதியாகவுள்ள 3120கோடி ரூபா இடைவெளியை நிரப்புவதற்கு வெளிநாட்டுக் கடனாக 1420 கோடியும் உள்ளூர்க் கடன் மூலம் 1080கோடி ரூபாவும் பெறப்படும் மிகுதியாக 520 கோடி ரூபா மேலதிக செலவீனத்தில் உள்ளது. சில பிரதான அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைக் குறைப்பதற்கும் நிதியமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கென 1070 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில்310 கோடி ரூபா இராணுவத்திற்கும் 91 கோடி 80 லட்சம் ரூபா கடற்படைக்கும் விமானப் படைக்கு 100 கோடி

[8ம் பக்கம் பார்க்க]

★ இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு 'விபுல்' பலியானதைக் கண்டித்து

# இன்று குடாநாட்டு பாடசாலை மாணவர்கள் மௌன ஊர்வலம்

### கல்விப்பணிப்பாளர், அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்படும்

(அலுவலக நிருபர்)

யாழ். மத்திய கல்லூரி மாணவ தலைவன் விபுலானந்தன், பாடசாலை நேரத்தில் யாழ். கோட்டை இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானதைக் கண்டித்து, யாழ். குடாநாட்டிலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் இன்று காலை ஒன்றுசேர்ந்து பிரமாண்டமான மௌன ஊர்வலம் ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இன்று காலை சீருடையில் தத்தமது பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், கறுப்புப்பட்டி அணிந்து அங்கிருந்து ஒழுங்குசெய்யப்பட்ட வாகனங்களில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்குவந்துசேருமாறு கேட்கப்படுகின்றனர்.

சகல பாடசாலை மாணவர்களும் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலை வந்தடைந்ததும் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் காலை 9 மணிக்கு யாழ். கல்வி அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் செல்வார்கள்.

ஊர்வலத்தினர் கல்வி அலுவலகத்தைச் சென்றடைந்ததும், மாணவ பிரதிநிதிகள் கல்விப் பணிப் பாளரிடம் சென்று மகஜர் ஒன்றைக் கையளிப்பார்கள்.

மீண்டும் அவர்கள் ஊர்வலமாக யாழ். செயலகத்தை அடைந்து பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தி யாழ். அரசாங்க அதிபரிடமும் மகஜர் ஒன்றைக் கையளிப்பார்கள்.

**மகஜர் விபரம்**

யாழ் கோட்டைக்குள் இராணுவத்தினர் முகாமிட்ட காலம் தொடக்கம் யாழ், மத்திய கல்லூரியே அதிக பாதிப்புக்குள்ளாகி வந்திருக்கிறது.

இக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் ஆசிரியர்கள் கோட்டை முகாம் இராணுவத்தினர் அடிக்கடி மேற்கொள்ளும் துப்பாக்கிப் பிரயோகத்துக்கும், 'ஷெல்' தாக்குதலுக்கும் இலக்காகி வந்திருக்கிறார்கள். இத்தாக்குதலுக்கு வேம்படி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவும் விதிவிலக்கல்ல.

இத் தாக்குதலிலிருந்து பாதுகாப்பளிக்குமாறு யாழ். மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்கள், யாழ். கோட்டை இராணுவமுகாம் அதிகாரியு

8-ம் பக்கம் பார்க்க)

இலங்கை

## ஸ்திரமற்ற நிலை அடைவதை இந்தியா ஏற்றுக்கொள்ளாது

கொழும்பு, புதன் இலங்கை ஸ்திரமற்ற நிலை அடைவதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று 'த றிப்யூன்' என்ற இந்தியப் பத்திரிகை அதன் ஆசிரியத் தலையங்கத்தில் தெரிவித்துள்ளதாக லங்காபுவத் செய்தி வெளியிட்டுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் பேரம் பேசுவதை எவ்விடத்தில் நிறுத்துவது என்பதையும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பேச்சு வார்த்தைகளை எப்பொழுது ஆரம்பிப்பது என்பதனையும் தீர்மானிப்பது மிகவும் அவசியமாகும் என்றும் மேலும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'லங்கா புவத்' தெரிவித்துள்ளது. (ஒ)

### பிரஜைகள் குழு உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

திருகோணமலை, புதன் திருகோணமலை மாவட்டத்தில் திரியாய் பிரஜைகள் குழு உறுப்பினர்களான என். தர்மலிங்கம், ரி. துரைசாமி ஆகியோர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

தமிழ்ப்பகுதிகளில்

## இராணுவம் பலத்த தாக்குதல் நடத்துமென இந்தியா அச்சம்

— பி. பி. ஸி.

(லண்டன்)

இனப்பிரச்னை தொடர்பான இலங்கை அரசின் சமாதானத் திட்டத்தை போராளிகள் குழுக்கள் நிராகரிக்கும் பட்சத்தில் இலங்கை அரசு எடுக்கும் மாற்று நடவடிக்கைகள் மூலம் தமிழ் பகுதிகளில் இராணுவம் பலத்த தாக்குதல்களை மேற்கொள்ளுமென இந்தியா அஞ்சுவதாக நேற்று பி. பி. ஸி. தெரிவித்தது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவப் படைகள் அனுப்பப்பட்டு வருவதும் இலங்கை விமானப்படை தளபதி சீனாவிற்கு விஜயம் செய்ததும், இலங்கை இஸ்ரேலிடமிருந்து புதிதாக எட்டு போர்க்கப்பல்கள் வாங்கியிருப்பதும் ஏனைய நாடுகளிலிருந்து இராணுவ தளபாடங்கள் வாங்கியிருப்பதும் போராளிகள் குழுக்களிற்கெதிராக

(8ம் பக்கம் பார்க்க)

### மின்சாரசபை ஊழியர்களின் சேவை

யாழ்ப்பாணம், வியா: யாழ். நகரில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை கோட்டையிலிருந்துமேற் கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலினால், நகரில் அறுந்து தொங்கிய மின் கம்பிகளினால் மக்களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படாமல், மின்சாரசபை ஊழியர்கள் உடன் நடவடிக்கை எடுத்தார்கள்.

தியணைக்கும்படை வாகனத்தில் அவர்கள் வந்து, தொங்கிய வயர்களை அகற்றியதுடன், சில இடங்களில் மின்தொடர்புகளையும் அகற்றினார்கள். இவர்களின் துரித நடவடிக்கையை மக்கள் பாராட்டினார்கள்.

புதுக்கடைத்

திறப்பு விழா

† சிவா றேடிங்கோ †

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

பலசரக்கு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

07-11-1986 வெள்ளிக்கிழமை

காலை 9-00 மணிமுதல் 11-00 மணிவரை

டச்சுவீதி, சாவகச்சேரி.

மேற்படி வைபவத்தில் வாடிக்கையாளர்கள். நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.
[C-5613]

உரிமையாளர் :
V. சிவா

### பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு பரீட்சை

## யாழ்ப்பாணத்தில் நடக்கும்?

### பேராசிரியர் வித்தி முயற்சி

யாழ்ப்பாணம், வியா. பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தமிழ் மாணவருக்கான கலைப்பிரிவு. விஞ்ஞானப்பிரிவுக்கான வெளிவாரிப்பட்டப்பரீட்சைகள் இவ்வாண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது.

வெளிவாரி பட்டப்பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவது சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேராதனைசென்று பேராதனைப்பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் பாணபொக்கே, பேராசிரியர்கள் பண்டிதரத்ன, கார்ள் குணவர்த்தன, டயஸ் ஆகியோருடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்தே இப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்தப் படவிருப்பதாகத் தெரிகிறது.

இக்கலந்துரையாடலின் போது பரீட்சைத்திணைக்களத்தால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக் கேள்வித்தாள்களைப்போல் இப்பரீட்சைக்குரிய கேள்வித்தாள்களையும் யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்தால் இங்கு இப்பரீட்சையை நடத்த முடியும் என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

பேராசிரியர் சு. வித்தியா

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள NV - 800 நஷனல் டெக் விற்பனைக்குண்டு. 12.000/- இராசேந்திரம், 32/15, செம்பிதோட்டம், ஒட்டுமடம். [C 5602]

வட இந்தியா முறைப்படி தயாரிக்கப்பட்ட ''மாங்காய் ஊறுகாய்'', ''வெள்ளைப்பூடு அச்சார்'', ''தேசிக்காய் ஊறுகாய்'' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M.G.M ,777,K.K.S. Road and 208, 1st Cross St; Jaffna; Telephone:22611. (C 5069)

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைக்கவிருக்கும் ஒரு நிறுவனத்திற்கு இருதொகை பங்காளர்கள் தேவை. எழுத்து மூலமான விண்ணப்பங்கள் 15-11-86 வரை ஏற்றுக்கொள்ளப்படும். 426/2, கில்னர் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். C 5360

அலுமினிய பாத்திரங்கள் செய்யக்கூடிய ஸ்பின்னர்கள் தேவை: நேரில் வரவும். பேள் மெற்றல் இன்டஸ்ரீஸ் 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்; C 5574

அனுபவம் வாய்ந்த (Tinker) தேவை முக்கியமாக உருக்கு தளபாடங்கள் (Steel Cabinets) தேர்ச்சி பெற்ற ஆட்கள் தேவை. உடன் நேரில்வரவும். Pentagom Engineers and Contractors. 271. Kachcheri Nallur Road, Nallur; (C 5590)

பெண் காரியதரிசி தேவை, வயது 24–38; G C E (O/L) சித்தியடைந்தவராகவும் ஆங்கில, தமிழ் தட்டெழுத்து தெரிந்தவராகவும் இருக்க வேண்டும் - முடிவுத் திகதி: 15-11-86. முகவரி: ஹரிஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (C 5597)

சமையல் வேலை தெரிந்த வீட்டுபணிப்பெண் உடன தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது. சகுக்க சம்பளம் வழங்கப்படும்: மாலை 2 மணிக்கு பின் நேரில் தொடர்பு கொள்ளவும். விலாசம் No 47, விதானையார் வீதி யாழ்ப்பாணம். [C 5599]

## கல்வி

Radio, TV, and Electronic Engineering, Electric wiring, Motor Rewinding வெளிநாடுகளில் கடமையாற்றிய பொறியியலாளரால் வகுப்புகள் நடாத்தப்படுகிறது. தொடர்பு கொள்க. நிமல் ராச் முதலியார் வளவு, சூசைப்பர் கோவிலடி, அச்சுவேலி, C 5569

## சேவை

கைரேகை, எண்சோதிடம் கிரகநிலை விபரமாகப்பார்த்து உண்மைநிலை சொல்லப்படும். இத்துடன் மணமகள், மணமகன் தேவையானவர்களும் உடன்தொடர்புகொள்ளலாம் செவ்வாய் குற்றமுள்ள சாதகர்களுக்கு முதலிடம் உண்டு. செ. நாகேந்திரராசா, 174/16, கோவில்வீதி, (கைலாசபிள்ளையார் கோவிலடி) யாழ்நகர். (C-5499)

## வகுப்புகள்

Radio, T.V, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைண்டிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆரம்பமாகின்றன. தொடர்பு Vispa Engineering Aid Hall. No 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்: (C 5544)

108 Brown Road A/L 87 இரசாயனம் மீட்டல் வகுப்பு ஆசிரியர் சத்திஸ். ஆரம்பம்: 8-11-86 சனி 2-30 p.m. வகுப்பு நேரம் சனி, ஞாயிறு 2-30 - 4-30 p. m. (C 5575)

108 Brown Road A/L 88 வெப்ப இரசாயனம் ஆசிரியர் சத்திஸ். ஆரம்பம்: 8-11-86 சனி 6-15 a. m. வகுப்பு நேரங்கள் சனி, ஞாயிறு 6-15 a. m: C 5576

க. பொ: த (உயர்) 87-ம் ஆண்டு கலை, வர்த்தக, விஞ்ஞான பிரிவு மாணவருக்கு 7 - 11 - 1986 பகல் நேர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. Modern Education Centre, Karaveddy. (C-5475)

க. பொ: த. (உயர்) 87ம் ஆண்டு மாணவருக்கு வினாவிடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு விஞ்ஞான பாடங்கள் மட்டும் 7-11-1986 ஆரம்பமாகிறது. Science Centre, Karaveddy. (C 5474)

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
### 1987 ம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

மராமத்துப் பகுதி வேலைகளுக்குத் தேவையான கிறசர் சல்லி வகைகள், கையினால் உடைத்த சல்லி, கண்டகல், கிறசர், தூள், கிறவல், மக்கி, ஊரி, மண் வகைகள், சுண்ணாம்பு, தேங்காய் மட்டை, கிடுகு ஆகிய பொருட்களை வழங்குவதற்குத் தகுதியுடைய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் அனுப்பப்படும் உறையில் இடது பக்க மேல் மூலையில் ''மராமத்துப் பொருட்கள் வழங்குநர் பதிவு'' எனக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்;

விண்ணப்ப முடிவு திகதி 14-11-1986.

சி. வி. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்.
மராமத்துப் பகுதி,
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்; (C 3064)

## தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பெண் லிகிதர் கீழ்க்காணும் தகைமையில் தேவை. க. பொ. த, (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தவரும், கணக்கியலில் அனுபவமுடையவரும் ஆங்கிலம் எழுத வாசிக்கக்கூடியவரும், தட்டெழுத்து வேலையில் அனுபவமுடையவரும் முன் அனுபவங்களையும் தகைமைகளையும் குறித்து 20 வயதிற்கும் 30 வயதிற்குமிடைப்பட்டோர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3050 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்; C 3050

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.
### இரண்டாம் ஆண்டு விஞ்ஞானபீடப் பரீட்சை 1986.

தூயகணிதபாடப் பரீட்சை (PMG 21) 16-11-86 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும்;

பதிவாளர்
C 3065]

### பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

கோண்டாவில், கோண்டாவில் மேற்கில் வசித்து காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துராசா என்பவரின் மரணசாதனமின்றி மரணித்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

காலஞ்சென்றவர்.

வழ: இல. தத்துவம்/3884

சின்னத்தம்பி முத்துராசா
கைம்பெண் சின்னமணி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மனுதாரர்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 26ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதிவுபட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1985ம் ஆண்டு சித்திரை மாதம் 25ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது
வ. மயில்வாகனம்,
மனுதாரரின் சட்டத்தரணி:

காரணம் காட்டும் திகதி 14-11-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது;

[A5566]

### 31-ம் நாள் நினைவஞ்சலி



மயில்வாகனம்
பாலேந்திரன் (பாலி)
7 சிறி 9147 வாகன
உரிமையாளர்)
மண்ணுலகம்:
30- 06 1967
விண்ணுலகம்:
07- 10- 1986

உழைப்பும்-நீ வெற்றி
கொண்டாய்
உனதுழைப்பால்
உத்தம- நல் வாழ்வு
கண்டாய் உனதுகாரால்
வாழவழி ஈதெனவே
வலித்து காட்டி
வாழ்ந்திருந்தாய்
வறுமையிலும்
அன்புமிக
சூழவரு சுற்றம் நண்பர்
மெச்ச வாழ்ந்தாய்
சோர்ந்திடுறுன்
சோதரங்களொடு
அன்பரெல்லாம்
ஆழமிகு துயர்பட்டே
அலறக்கண்டாய்
ஆருந்தான் உன்திறமைக்
கொப்பதுண்டோ.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் நேரில் கலந்து கொண்டும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு, அனுப்பி வைத்து அனுதாபம் தெரிவித்த சனசமூக நிலையங்களுக்கும், வாகன ஊர்வலமாகச் சென்ற வாகன உரிமையாளருக்கும், நண்பர்களுக்கும் பல்வேறு வகைகளில்உதவி ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (06-11-86) நடக்கவிருக்கும் அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளின் போது அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொண்டு அன்னாரது ஆத்மாவுக்கு சாந்தியளிக்குமாறு பணிபுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தந்தை,
உடன்பிறந்தோர்,
மருமக்கள்,
குரும்பைகட்டி,
புலோலி. [C 5583]

### 60 பேர் கைது

மட்டக்களப்பு நிருபர்

மட்டக்களப்பு ஆரையம்பதி, நாவற்குடா ஆகிய பகுதிகளில் திடீர் தேடுதல் வேட்டை நடத்திய அதிரடிப்படையினர் பெண்கள் உட்பட சுமார் 60 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

மேலும் இச் சம்பவத்தின் போது அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 22வயதுடைய இளைஞர் ஒருவர் பலியானார்.

நேற்றுக் கைது செய்யப்பட்ட 60 பேரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

(மா)

### 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லலும்



அமரர் சின்னர்
செல்லையா
(முன்னாள் கமவிதானை
கிளிநொச்சி)
தோற்றம்: 20-06-1904
மறைவு: 8-10-1986

அமைதியின் உறைவிடமாய் வள்ளுவன்வழி வாழ்ந்து எமையெல்லாம் வாழவைத்த தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

7- 11- 86ல் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

அன்னாரது இறுதிச் சடங்குகளில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் வேறும் பலவகைகளில் உதவிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சந்திரவ வளவு,
துன்னாலைதெற்கு,
கரவெட்டி. [C 5468]

### அறிவித்தல்

**வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்**

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (09-11-1986) காலை 9.00 மணிக்கு 'ஹோட்டல் ஞானம்ஸ்' இல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இக்கூட்டத்திற்கு சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். [பிரதிநிதிகள் அனுமதிக்கப்படமாட்டார்கள்]

இக் கூட்டம் சம்பந்தமான அறிவித்தல் ஏற்கனவே சகல அங்கத்தவர்களுக்கும் தபால் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை கிடைக்கப் பெறாத அங்கத்தவர்களையும் தவறாது இக்கூட்டத்திற்கு சமூகம் அளிக்கும்படி வேண்டுகின்றோம. கூட்டமுடிவில் அங்கத்தவர்களுக்கு சங்கத்தின் அடையாள அட்டைகள் வழங்கப்பட இருப்பதால் இரண்டு பாஸ்போட் அளவு புகைப்படங்களும் கொண்டுவரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மு. சி. சண்முகராஜா,
செயலாளர்;

345, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்; (A-5584)

# கடந்த இரு மாதங்களில் ஆப்கானில் 30க்குமதிகமான ஹெலி, விமானங்கள் சுடப்பட்டன!

காபுல், நவ 5

**ஆப்கானிஸ்தானில் கடந்த செப்டெம்பர் மாதம்முதல் அக்டோபர் மாதம் இறுதிவரை 30க்குமதிகமான ஹெலிகாப்டர்கள், ஜெட் மற்றும் இராணுவப் போக்குவரத்து விமானங்கள் என்பன சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளன. இவை ஆப்கானிஸ்தான் அரசுக்கும், சோவியத் அரசுக்கும் சொந்தமானவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஆப்கானிஸ்தானின் மூன்று வேறு கிளர்ச்சிப் பிரிவுகளினாலேயே மேற்படி ஹெலிகாப்டர்கள், விமானங்கள் என்பன சுடப்பட்டதாக 'ஆப்கான் இஸ்லாமிக் பிரெஸ்' என்ற கிளர்ச்சியாளர் சார்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.


காபுல், பகரன், ஜலாலாபாத் என்ற இடங்களிலேயே இந்தவிமானங்கள் சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. விமானநிலையங்களிலிருந்து மேலெழும்பும்போதே அநேகமான விமானங்கள் சுடப்பட்டதாகவும் ஹெலிகாப்டர்களில்பல கிளர்ச்சியாளர்களின் தளத்துக்கு அருகே சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இருவாரத்தில்ஜெட் மற்றும் சில விமானங்களுடன் 5 ஹெலிகாப்டர்களை ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரையிலிருந்து ஆகாயத்தை நோக்கிச் செல்லும் ஏவுகணைகள் மூலமாகவே ஹெலி, மற்றும் விமானங்களில் பல சுட்டு வீழ்த்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுடப்பட்ட ஹெலிகாப்டர்களில் சோவியத்தின் நவீன எம். ஐ. 24 ரக ஹெலிகாப்டர்களும் அடங்குகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

உலகச் செய்திகள்



யாழ். ஆஸ்பத்திரி வீதியின் அருகருகேயுள்ள இரு கடைகள் ஷெல் தாக்குதலினால் முற்றாகச் சேதமடைந்துள்ளதை முதலாவது படத்திலும், யாழ். நவீன மார்க்கட் மக்கள் வங்கிக் கிளை ஷெல் தாக்குதலினால் எரிந்த நிலையில் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: தேவா)

## திருத்தவேலைகளில்——

## பிரிட்டனின் ஆடம்பர கப்பல்கள்!

லண்டன், நவ 5

குயின் எலிசபெத்-2 என்ற பிரிட்டனின் ஆடம்பர உல்லாசக் கப்பலுடன் கன்பரா என்ற மற்றைய ஆடம்பரக் கப்பலும் திருத்தவேலைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

மே. ஜெர்மனியிலுள்ள துறைமுகமொன்றிலேயே இவ்விருகப்பல்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

'குயின்எலிசெபத்-2' 90மில்லியன் பவுண்கள் செலவிலும் 'கன்பரா' 30 மில்லியன்பவுண்கள் செலவிலும் திருத்தப்படவுள்ளன.

இவையிரண்டும்பிரிட்டனின் பிரதான ஆடம்பரக் கப்பல்களாக இருப்பதுடன் உலகின் மிகப்பிரபல்யம்வாய்ந்த உல்லாசக்கப்பல்களாகவுமுள்ளன.

1982ம் ஆண்டு போக்லாந்து யுத்தத்தின்போது இவ்விரு கப்பல்களும் பிரிட்டிஷ் துருப்புக்களை போக்லாந்துக்கு ஏற்றிச் செல்வதற்கு உபயோகிக்கப்பட்டன.

இவ்விருகப்பல்களும் திருத்தப்படும்பட்சத்தில் 21ம் நூற்றுண்டின் கடல்பயண சவால்களை இவை ஏற்கக்கூடியவவாக காணப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 51 பேர் மரணம்

கராச்சி, நவ 5

பாகிஸ்தானின் கராச்சி நகரில் இடம்பெற்றுவரும் கலவரங்களில் இதுவரை 51பேர் கொல்லப்பட்டுள்ளனர். 450 பேர் படுகாயமுற்றுள்ளனர்.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## அமைப்பு வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1986 ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12,00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அட்டவணை

| இல. | வேலைவிபரம் | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப் படிவக்கட்டணம் (மீளளிக்கப்பட முடியாதது) | ஒப்பந்தகாரர் பதிவுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | யாழ். பொது சன நூல்நிலைய வண்ணார்பண்ணை கிளை நூல்நிலையம் | 2500/- | 250/- | 1,000,000/- |
| 2. | குருநகர் சந்தை கட்டிட மேலதிக வேலை | 500/- | 150/- | 100,000/- |
| 3. | (ஏ) தேவரீர்குளம் வீதி மதவு அமைத்தல் (பீ) ஆத்திசூடி வீதி மதவு அமைத்தல் (சீ) பொம்மைவெளி மகப்பேற்று நிலைய திருத்தவேலை | 500/- | 150/- | 100,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 18ந்திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு கேள்விக்கும் எதிராகவுள்ள கேள்விப் பிணைப்பணம், கேள்விப்படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(A3063)


## வலதுசாரிகளுக்கு ஆதரவு:

## மொசாம்பிக் இளைஞர்கள் ஆத்திரம்!

மபுட்டோ, நவ 5

மொசாம்பிக்கின் தலைநகரான மபுட்டோவில் மாலாவிநாட்டின் துதரகமும் தென்னாபிரிக்காவின வர்த்தகநிலைய மொன்றும் சுமார் ஆயிரம் இளைஞர்களால் தாக்கப்பட்டன.

மொசாம்பிக் அரசுக்கு எதிராக இயங்கிவரும் எம். என். ஆர். என்ற வலதுசாரி கிளர்ச்சிப் பிரிவுக்கும் மாலாவியும், தென்னாபிரிக்காவும் ஆதரவு காட்டுவதாகத் தெரிவித்தே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் மேற்படி இருநடுகளினதும் ஸ்தாபனங்கள் பலத்த சேதத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மொசாம்பிக்கின் புதிய தலைவர் திரு. ஜோக்கிம் செபொனே. எம். என். ஆரின் கிளர்ச்சிநடவடிக்கைகளை தீவிரமாக முறியடிக்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.

திரு. செஸாக்கு மொசாம்பிக்கின் புதிய அதிபரானது குறித்து உலகத்தலைவர்கள்பலரும் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.



இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அண்மையில் மொரிஷியஸ் நாட்டுக்கு விஜயம் செய்தபோது இந்துமத பிரதம குருவும், சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோவில் பிரதம சிவாச்சாரியாருமாகிய, அனலைதீவைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ த. பாலசுப்பிரமணியக் குருக்களால் வரவேற்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம். [குண்டிக்குளி நிருபர்]

### மணிவாக்கு

பலகாரம் எம்முடையதல்லவென்பதால் அதனைப் புகழ்ந்து பங்கிடுவதில் எத்தனை ஆர்வம் காட்டுகின்றோம்.

—வாலடர் சவேஜ் லான்டர்

# நமது நோக்கு

## கற்பனைக் களஞ்சியம்

சமீபத்தில் லண்டன் சென்றுள்ள ஒரு இலங்கைவாசி பிரிட்டிஷ் வானொலி நிலையத்திற்கு விஜயஞ் செய்தபோது அங்குள்ள நூலகத்தில் தினசரிப்பத்திரிகைகளைப் படிக்க அனுமதி கோரினார். நூலக உதவியாளர் மிக வினயத்துடன் அவரை புனைகதைப் (Fiction) பிரிவுக்கு அழைத்துச் சென்றார்.

இதுவும் ஒரு புனைகதையா என்று வாசகர் நினைக்கலாம். எங்கள் பத்திரிகையும் அங்கு இருந்ததா என்பதே எங்கள் விசனம்.

இந்நாட்டின் பத்திரிகைகள் எவை அங்குகாணப்படுமென்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை. அதுவும் இன்று எமக்குத் தென்பூட்டுவது கொழும்பு ஆங்கிலத் தினசரி குறிப்பிடும் யாழ். மத்திய மாணவத் தலைவனின் மரணம் பற்றிய செய்தி.

கோட்டை இராணுவ முகாம் இயற்றி வரும் சாதனைகளை பீ பீ சி நூலகத்தில் வாசகர்கள் ரசிப்பார்கள் கல்லூரிகளையோ, ஆஸ்பத்திரிகளையோ, மாணவர்களையோ மற்றும்பொது மக்களையோ ராணுவம் தாக்குவதில்லை, கொல்வதில்லை, தம்மைப்பாதுகாக்கவும், இயலுமானால் தம்மைத்தாக்கும் தமிழ்ப் போராளிகளைத் திருப்பித் தாக்கவுமே கோட்டையில் வீற்றிருக்கின்றரென அங்கு காணப்படும் பத்திரிகைகள் கூறுகின்றன.

இச்செய்தியை நம்பாத வைத்திய அதிகாரிகள் சங்கம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து நேரடிப்பார்வையிட்டனர்.

டாக்டர்கள் அமைச்சர்களானல் பகுத்தறிவுபாதிக்கப்படலாமென்ற அச்சம் எமக்குண்டு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலிருந்து ''பயங்கரவாதிகள்'' கோட்டை முகாமைத் தாக்குவதாலேயே, ஆஸ்பத்திரி அபாயத்துக்குள்ளாகுது என்று அமைச்சர் ஒருவர் கூறுவதானல் உண்மைஎது கற்பனை து என்றறிவதெப்படி? 'தலயாத்திரையை இனிமேலாவது தாமதிக்காதீர்கள்' என்கிறது வைத்திய சங்கத்தின் மனச்சான்று.

இயலுமளவிற்கு உண்மையை வெளியிடும் நாம் புனைகதையிலும் பார்க்க ஆபூர்வமான கற்பனையென்று கருதக்கூடிய உண்மைகள் வெளிவருகின்றன.

'காலிச்' சிங்கள நோயாளி, யாழ்ப்பாணத்தில் விசுவாசம் கொண்டிருக்கிறார். கொழும்பு சிகிச்சை சரியில்லை எனவே யாழ்ப்பாணம் என்பது இவ்விஜயத்தில் சங்கம் நேரில் அறிந்தது.

இன்று ரேயல். ஆனந்தா முதலிடம் எவ்வாறென்பதை பீ பீ. சி புனை கதைப் பிரிவில் அறியலாம், அன்று தென்னிலங்கை சிங்கள மாணவர் உயர் கல்விக்காக யாழ்ப்பாணம் வந்ததை இன்றையநிலையிலும் யாழ்ப்பாணத்தில் விசுவாசமுள்ள சிங்கள நோயாளர் உறுதிப்படுத்துகின்றார்.

தினசரி பத்திரிகைகள் கற்பனைக் களஞ்சியமென்று கொள்வதில் பீ. பீ. சி. அதிகம் தவறவில்லை.

உள்ளதை உள்ளவாறு அறிய நேரடிப் பயணத்திற்கு நிகரான தொன்றுமில்லை

எம்மிற் பலரைப்போல் வைத்திய அதிகாரிகள் சங்கம் யாழ் மத்திய மாணவ முதல்வன் விபுலானந்தன் கடமையிலிருக்கும் போது எவ்வாறு கொல்லப்பட்டாரென்பதை நேரில் அறியமாட்டார்கள்.

'பயங்கரவாதிகள்' தம்முள் மோதிக் கொள்ளும் போது இச்சோக சம்பவம் நடைபெற்றதாகக் கூறும் கொழும்பு பத்திரிகைகள் செய்திக்கு உப்பில்லை என்பதை உணர முடியவில்லை.

இன்று யாழ் குடாநாடு ராணுவ அட்டூழியங்களை எதிர்க்கும் ஒரு பெரும் சமுத்திரமாகத் தளம் தட்டுகிறது.

இதனை ஜனதிபதி, பிரதமர் ஏனைய தலைவர்கள் எவ்வித அச்சமுமின்றி நேரில் பார்ப்பது நன்மையளிக்கும்.

## 'நாகாக்க'

எதுகை, மோனையுடன் பேசுவது சுவைபட இருந்தாலும் சில வேளைகளில் ஆபத்தில் முடியும். மேற்கு ஜெர்மன் அதிபர் ஹெல்பட் கோலுக்கு இந்த அவலம் ஏற்பட்டிருக்கிறது.

அத்துடன் தம்முடைய பெயருக்குரிய பாதுகாப்பையும் (ஹெல்மட-தலைக்கவசம்) கைவிட்டுப் பேசியிருப்பதுபோல் தெரிகிறது. ஹிட்லரின் பிரசார அமைச்சர் கீபல்சுடன் (Goebels) சோவியத் ரஷ்யத் தலைவர் கோபர்ச்சேவை ஒப்பிட்டுப் பேசுவதற்கு மோனையிலிருந்த ஆர்வமே எமக்குப் புலப்படுகிறது.

ஹிட்லரின் கொடிய யுத்தத்திலிருந்து ஜெர்மனியைப் பாதுகாத்த சோவியத் ரஷ்யா எத்தனை இலட்சம் சோவியத் வீரர்களை இழந்ததென்பது கோலுக்குத் தெரியாத இரகசியமல்ல.

முதற் 14 வருடங்களுக்கு (1949-63) மேற்கு ஜேர்மனிக்குத் தலைமை பூண்ட அதிபர் கொன்ரு அடினர் (Adenauer) இவ்வாறு கூறியிருப்பாரா? அமெரிக்காவின் நண்பராக அவர் இருந்தபோதும் ரஷ்யாவை உதறித் தள்ளவோ ஏளனம் செய்யவோ இடமளிக்கவில்லை.

இன்று கோலின் ஆட்சியில் அமெரிக்க ஜனதிபதி றீகனின் செல்வாக்கு அதிகரித்திருப்பதால் இந்த சொல்லிழுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சோவியத் ரஷ்யாவின் அரசியல் மேற்கு ஜேர்மனிக்கு கசப்புடையதாக இருக்கிறது.

இருந்தபோதும் கோபர்ச்சேவ் உலகத் தலைவர்களில் முன்னணி வகிப்பதாலும் செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என்பதாலும் முன்யோசனையற்ற இவ்வித பேச்சு பொன்- மாஸ்கோ உறவைப் பாதிப்பதில் என்னவியப்பு.

உலக அரசியல் — அவதானி

## நோபல் சமாதானப்பரிசு எழுப்பியிருக்கும் சர்ச்சை

## கார்த்திகையில் கூடவிருக்கும் சார்க் (SARRC)

## மகாநாட்டில் உருப்படியான சாதனைகளுக்கு இடமுண்டா?

## தென்கொரியா பல்கலைக்கழக மாணவர் கிளர்ச்சி

## அரசின் அடக்குமுறைக்கு அடிபணியும் சாத்தியமுண்டா?

இவ்வருட சமாதானத்துக்குரிய நோபல் பரிசு பெற்றவர் இரண்டாவது உலக யுத்தத்தில் ஹிட்லரின் நாஸி அரசியலுக்கு எதிராக வாதாடி அதனை முறியடிக்க சோவியத் ரஷ்யா நடத்திய வீரப் போரை வியந்து சமாதான உலகுக்குப் பெரும் பணியாற்றிய எலி வீசல் (Eli Wesel) என்பவர்.

பரிசின் முடிவு வெளியானதும் மாஸ்கோ விரைந்த இப்பெரியார், சோவியத் யூனியனில் வதியும் பல்லாயிரக் கணக்கான யூதர் நாட்டைவிட்டு வெளியேற அனுமதி அளிக்கவேண்டுமென்று சோவியத் அதிகாரிகளைக் கேட்டிருக்கிறார்.

அது மட்டுமல்ல; 1975ல் சமாதான நோபல்பரிசு பெற்ற ரஷ்ய பௌதிக நிபுணர் சக்கரவ் அரசுக்கெதிரான கருத்துள்ளவரென்று, கோர்க்கி (Corky) நகரத்திற்கு நாடு கடத்தப்பட்டது நியாயமற்றதென்றும், அவரை மீண்டும் மாஸ்கோ திரும்ப அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

சோவியத் ரஷ்யாவுக்கெதிராகக் கருத்துப் பரிமாறும் அறிஞர்கள், அந்நாட்டின் பிரஜைகளாக இருந்துவிட்டால், பரிசு வழங்கும் சுவிடிஷ் அக்கடமி அவர்களுக்குச் சார்பாக இருக்கிறதென்ற சந்தேகத்தை சென்றவாரக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம்.

அது எவ்வாறாயினும் வீசல் வெளியிடும் கருத்து அவர் பெரும்போக்குடையவர் என்பதைக் காட்டுகிறது ''விஞ்ஞானி சக்கரவ் என்னுடைய உடன்பிறவாத சகோதரர், மதிப்புக்குரிய ஆற்றல் பெற்றவர், மனிதாபிமானவாதி, அவரைத் தனிப்படுத்தி வைப்பது நியாயமல்ல. எனவே இன்று புதிய மெருகுடன் விளங்கும் சோவியத் ஆட்சி சோவியத் யூதர்களுக்கும், அறிஞர் சக்கரவோவிற்கும் நியாயம் வழங்க வேண்டுமென்று கோருகின்றேன்'' என்று சோவியத் தலைமைப் பீடத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார்.

''நிரம்பியகவலையுடன் பாரிஸ் செல்லும் வீசல், இன்று தலைவர் கோர்பச்சேவைச் சந்திக்க முடியாததால் திரும்பி வரும் போது இவற்றிற்கு நல்ல தீர்வு காண்பதில் நம்பிக்கைகொண்டிருக்கிறார். சோவியத் யூனியனைவிட்டு வெளியேற சுமார் 3000 யூத குடும்பங்கள் ஆவல் கொண்டிருப்பதாகச் சொன்ன வீசல, சுமார் நான்கு லட்சம் யூதர் சந்தர்ப்ப சூழ்நிலை சுமுகமானல் வெளியேற விரும்புவர்'' என்றார்.

### இந்திய உபகண்டம்

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மூன்றும் தத்தம் நெருக்கடிகளில் மூக்குமுட்ட மூழ்கியிருக்கின்றன.

ஒன்றாயிருந்து மூன்றாய்ப் பிரிந்த முயற்சியின் விளைவு, தென்னாசியாவிலும் ஏனைய உலகிலும் மிகப்பெரிய பலமான ஜனநாயகநாடு பாரதம் என்ற எதிர்பார்ப்பை முறியடித்திருக்கிறது.

பாகிஸ்தானுக்கும் பங்களாதேஷுக்கும் உண்டான உள்நாட்டுக் குழப்பங்கள் அங்கு இன்றும் தொடருவதாக மக்கள் கருதும் மார்ஷல் லோ ஆட்சியை அடிப்படையாகக் கொண்டதே. இவ்விரு நாடுகளிலும் மிகப் பலத்த எதிர்க்கட்சிகள் தத்தம் நாட்டில் நடைபெறும் சிவில் ஆட்சி பேரில்மட்டுமே என்றும், நடந்தேறிய ஜனதிபதித் தேர்தல்கள் ஜனநாயகமுறையில் நடத்தப்படாதவை; ஒழுங்கற்றவை என்றும் கிளர்ச்சிசெய்கின்றன.

இது அரசியலில் ஜனதிபதிகள் ஸியாவிற்கும், எர்ஷாத்திற்கும் பெரும் தலைவலி யென்றால், ராணுவ ரீதியில் பாகிஸ்தானுக்கு ஆப்கான் அகதிகளால் அதிகரித்து வரும் பிரச்னை; எர்ஷாத்திற்கு, சித்தகொங் மலைப் பிரதேசத்தில் வாழும் ஆதிகால மக்கள், அங்கு குடியிருக்கப் படையெடுக்கும் இஸ்லாமியரை எதிர்த்துப் போராட்டம் நடத்துகின்றனர்.

இந்தியாவின் பரந்த நிலப் பரப்பில் நிலவும் ஆட்சி மக்கள் தெரிந்தெடுத்த ஆட்சியென்பது மறுக்க முடியாதது. உல

(7ம் பக்கம் பார்க்க)

## சூரசங்காரம்

மாயை வெகு நுட்பமானது ஆச்சரியப்படத்தக்க அற்புதமான செயல்களுக்குக் காரணமாகவும் விளங்கும். மாயையின் நுணுக்கங்களை காரணகாரியத் தொடர்புகள் மூலம் அறிந்து பயன்படுத்துவதன்மூலம் இன்று விஞ்ஞானம் சாதிக்கும் சாதனைகளைக் கொண்டே மாயையின் சிறப்புக்களை அறியலாம். இத்தகைய மாயையை மந்திர சாதனைமூலம் வசப்படுத்தி யுத்தகளத்தில் அற்புதமாகப் போராடியவர்களுள் சூரபன்மனுக்கே முதலிடம் இருக்கும் மாயமந்திர சாதனைகளால் சூரன் ஒருவனே தனக்குமுன் வாழ்ந்த - தன் பொருட்டு இறந்த அத்தனை அசுரர்கள் போலவும் தோற்றம் கொண்டு யுத்தம் புரிந்தான். மண்குவியலாகவும், பெரும் சமுத்திரமாகவும், பயங்கரமான காற்றாகவும், அக்கினிச்சுவாலையாகவும் தோற்றம் கொண்டு அகில உலகும் அஞ்சும்படி போராடிய சூரனின் ஆற்றல்கள் அனைத்தையும் முருகப்பெருமான் தன் அம்புகளாலேயே அழித்தருளினர். சேனைப் பலம், ஆயுதபலம், மாயா பலம் என்பன எல்லாம் முருகனால் அழிக்கப்பட்ட நிலையில் கோபம் ஒன்றேமிக்க நிலையில் சூரன் முருகப்பெருமான் முன் நின்றான்.

அப்பொழுது ஞானஒளி வீசிக் கொண்டிருக்கும் அருட் தோற்றத்துடனான வேலாயுதத்தைத் தமது திருக்கரத்தில் தாங்கிய திருக்கோலத்தினரான முருகப்பெருமான் சூரபன்மனைப் பார்த்து 'சூரனே மழைமேகங்களிடையே தோன்றிய உடனே மறையும் மின்னலைப்போல நிலையில்லா மாயா வடிவங்கள் பலவற்றை நம்முன் கொண்டு யுத்தம் புரிந்தாய். அப்படியான உன் வடிவங்களையெல்லாம் எம்மிடம் இருந்த சாதாரண அம்புகளாலேயே அழித்துவிட்டோம். உன்னுடைய மாயா வடிவங்கள் போல் அழிவினையடையாத நித்தியத்தன்மை வாய்ந்த நமது பெரிய திருமேனியை நீ காணும்படியாகக் கொள்கின்றோம். நன்கு பார்ப்பாயாக' என்று கூறித் தன் திருப்பெருவடிவமான விஸ்வரூபத்தினை முருகப்பெருமான் கொண்டருளினர்.

பாம்பைக் கண்டவனுக்கு அச்சம் ஏற்படுவது போலவும் சுவைமிகு உணவைக் கண்ட அளவில் ஒருவனுக்கு வாயூறுவதுபோலவும் எத்தகைய ஆணவம் நிறைந்தவருக்கும் நல்லுணர்ச்சியையும் பரம்பொருளின் தத்துவங்களையும் சிறப்புக்களையும் உணர்த்த வல்ல சிறப்புடையதே முருகப்பெருமான் சூரபன்மனுக்குக் காட்டியருளிய விஸ்வரூபத் திருமேனியாகும்.

வெம்புயலிடையில் தோன்றி
விளிந்திடு மின்னுவென்ன
இம்பரில் எமது முன்னம்
எல்லையில் உருவம்
கொண்டாய்
அம்பினில் அவற்றையெல்
லாம் அட்டனம்
அழிவில்லாத
நம் பெருவடிவம் கொள்
வம் நன்று கட்டிடுதி
என்றார்.

— அருளாளன்

## நீர்வைக் கந்தசாமி தேவஸ்தானம்
## கந்தசஷ்டி 5ம் திருவிழா

ஓராறு திருமுகமும் ஒளிதிகழும் கண்களுமாய்
ஈராறு திருக்கரமும் எழில்படைத்த திருத்தோம்
நேர்நின்று வழிகாட்டி நிசரில் உருகாட்டிடுவாய்ளு
பேராறு போலவே நீர்வழிய நின்றனமே

பண்டிதர் முருகேசனர்.

# நெஸ்கியூறிற்றி'86

1 ம் பரிசு : ஆயுள் முழுவதும் மாதாந்தம் ரூ. 1000/- (அல்லது ரூ 100,000/- ரொக்கம்)

2 ம் பரிசு : ஆயுள் முழுவதும் மாதாந்தம் ரூ. 500/- (அல்லது ரூ. 50,000/- ரொக்கம்)

3 ம் பரிசு : ஒவ்வொன்றும் ரூ. 25,000/- கொண்ட மூன்று பரிசுகள்

150 ஆறுதல் பரிசுகள் : ஒவ்வொன்றும் ரூ 300/-

## உங்கள் சுபீட்சத்திற்கு வழிகோலும் மகத்தான போட்டி!

ஆம், இதுவே உங்களுக்கு அரிய வாய்ப்பு. நெஸ்கியூறிற்றி 86. வாழ்நாள் முழுவதும் மாதாமாதம் ரூ.1000/- வழங்கும். இதுபோன்ற போட்டி இலங்கையில் வேறெதுவும் கிடையாது. இப் போட்டியில் வெல்வதும் சுலபமானது.

### போட்டி விபரம்

போட்டிக்கான கூப்பனை நீங்கள் இலகுவில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக நெஸ்டோமோல்ட் ரின் இப்பொழுது காகித லேபலினுல் சுற்றப்பட்டு வருகின்றது. கூப்பனும் போட்டி விதிகளும் இந்த லேபலில் அச்சிடப்பட்டுள்ளன. போட்டிக் காலத்தில் மட்டுமே இந்த லேபல் நெஸ்டோமோல்ட் ரின்னில் ஒட்டப்பட்டிருக்கும். நெஸ்டோமோல்ட் பக்கெட்டின் பின்புறத்திலும் வெட்டியெடுக்கக்கூடிய கூப்பனும் போட்டி விதிகளும் காணப்படும். விதிகளைக் கவனமாக வாசித்துக் கூப்பனைச் சரியாக நிரப்பவும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு முழு லேபல் அல்லது பக்கெட்டில் இருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரண்டு கூப்பன்கள் இணைக்கப்பட வேண்டும். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனியே அனுப்பப்பட வேண்டும். எவ்வளவு கூடுதலான விண்ணப்பங்களை அனுப்புகிறீர்களோ அவ்வளவு கூடுதலான வெற்றி வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

### வாழ்நாள் முழுவதற்குமான வருமானம்

1 ம், 2 ம் பரிசுகளை வெல்வோருக்கென இலங்கை வங்கியில் விசேட கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு முறையே ரூ. 100,000/- உம் ரூ. 50,000/- உம் வைப்புச் செய்யப்படும். இரு அதிஷ்டசாலி களும் இந்தத் தொகைகளினுல் முறையே ரூ. 1000/ உம் ரூ. 500/- உம் மாதாந்தம் பெறுவார்கள். அல்லது அவர்கள் விரும்பினுல் மொத்தத் தொகையை உடனடியாகவே பெற்றுக் கொள்ளலாம்.

எண்ணிப் பாருங்கள. எவ்வளவு பெரிய அதிஷ்டம். உங்கள் சுபீட்ச வாழ்வுக்கு வழிகோலக்கூடிய மகத்தான வாய்ப்பு இதுவல்லவா?

### போட்டி விதிகள்

1. சகல விண்ணப்பங்களும் 'தெளிவாகவும் சரியாகவும் நிரப்பப்படுதல்' வேண்டும்.
2. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனுல், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் ஒரு ரின் லேபல் அல்லது பக்கெட்டிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரண்டு கூப்பன்கள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
3. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நெஸ்கியூறிற்றி '86" என்று குறிப்பிடப்பட்டுச் சகல விண்ணப்பங்களும் நெஸ்லே லங்கா லிமிட்டெட், த. பெ. எண் 2061, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்
4. முதல் நான்கு வாரங்களிலும் முதலாவதாகக் கிடைக்கும் 25 செல்லுபடியான விண்ணப்பங்களுக்கும் முந்துவோருக்கான பரிசாக தலா ரூ. 100 வழங்கப்படும். இவர்கள் ஏனைய பரிசுகளைப் பெறுவதற்தும் உரித்துடையவர்கள்.
5. நெஸ்லே லங்கா லிமிட்டெட், சிலோன் நியூட்ரீஷனல் ஃபூட்ஸ், தொம்ஸன் லங்கா ஆகியவற்றின் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கை வாழ் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. இப்போட்டி தொடர்பான எவ்வித கடிதத் தொடர்புகளுக்கும் இடமளிக்கப்படமாட்டாது.
7. வெற்றியீட்டுவோரின் பெயர்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

100 முந்துவோருக்கான பரிசுகள்: ஒவ்வொன்றும் ரூ.100

கூப்பன் பக்கட்டில் அச்சிடப்பட்டுள்ளது.

முடிவு தினம் டிசம்பர் 31

வாழ்நாள் முழுவதும் மாதாந்தம் ரூ.1000/- அல்லது ஒரே தடவையில் ரூ.100,000/- ரொக்கம்




விலை: ரூ. 27/-

விலை: ரூ. 46/-

JWT NL 2038 Licence No: S/542

## பிரயாண ஒழுங்கு

குவைட், சிங்கப்பூர், சவூதிஅரேபியா ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்பு

பணிப்பெண்கள், ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

வயது: பணிப்பெண்கள்:- 18—35

சம்பளம்:- 30 K D., 200 (சிங்கப்பூர் வெள்ளி)

வேலைக்காலம்:- [2 வருடம்]

சவூதி: வயது: 30 — 42

அடிப்படைச் சம்பளம்; 360 S/R

சாப்பாட்டுப்பணம்:- 140 S/R

வேலைக்காலம்: 2 வருடம்

2 கலர் படங்களும் 10 பாஸ்போட்சைஸ் படங்களுடனும் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**P. V. S. VAIKUNTHAN**
**UNILANKA MANPOWER TRAVELS**
KANAGASABAI ROAD, MANIPAY.

APP. No 527/5/86
527/7/86

(C 5595)



## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் நேரடியாக உடனுக்குடன்உங்களை அழைத்துச் செல்வார்.

### சவூதியில்:

1. AIRLINE ACCOUNTANTS
2. SALES PROMOTOR
3. TICKET and RESERVATION AGENT.
4. TRAFFIC OFFICER

(With ACCOMODATION and OTHER BENEFITS)

கிளீனேர்ஸ், Drivers மேசன், காப்பெண்ரர், Gardener, Labourer (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்)

இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

குவைத்: Labourer, கிளீனேர்ஸ், Drivers (இருப்பிடமும் சாப்பாட்டு வசதிகளுடனும்) இவற்றுக்கான வருமான வாய்ப்புகள் உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

எமது காரியாலயத்தில் பாஸ்போட் 10 படங்களுடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும் இவை

கைவசம் உடன் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம்;

**GROUP ATLANTIC**
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (A 2838



## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம்மாதம் 15-ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்புகொள்ளவும்;

சவூதி அரேபியாவுக்கு கட்டிடப்பகுதி Labourers ஆக செல்ல விரும்புவோர் 14-ம் திகதிக்கு முன்னதாக பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
**N. பாலா,**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

★ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் வங்களாவடிச் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

★ எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் குப்பிளான் சந்தியில் நிறுவப்பட்டுள்ளது.

[A-2845]


# இன்றைய பலன்

திகதி: 20 (6-11-86)
கிழமை:- வியழக்கிழமை
திதி: பஞ்சமி பி. இ. வரை
மாதம்:- ஐப்பசி மாதம்
நக்ஷத்திரம்: மூலம் பி. வரை

மேடம்: வாழ்க்கையில் தென்றல் வீசும். புத்திரர்களால் மகிழ்ச்சியுண்டு. அரசியல்வாதிகளுக்கு நன்று.

இடபம்: முன்னேற்றப்பாதையில் தடைகள் தென்படும். வேவுகளைத் தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். நிதானித்து செயலாற்றவும்.

மிதுனம்: மனம்போல் வாழ்வும்மலரும். சகலதுறைகளிலும் சமநிலை தென்படும். புதியபாதை நல்வாழ்க்கைக்கு வித்திடும்.

கடகம்: எதிலும் தோல்வியை முத்தமிடுவீர்கள். குறுக்குவழியில் இறக்கவேண்டாம். எதிர்பாராத வகையில் பொருள் விரையமாகும்.

சிங்கம்: எக்கருமத்தையும் எண்ணித்துணிக அமைதிகாலடியில் கிடைக்கும். புதுமையில் நாட்டமும் ஏற்படும்.

கன்னி: பந்தபாசம் உங்களை நாடிவரும், வரவிலும் திருப்தியுண்டு. நன்மையான இடமாற்றமும் ஏற்படும்.

துலாம், சகோதர சந்தோசம் தெய்வசிந்தை மேலிடும். ஆனந்த வாழ்வுமுண்டு.

விருச்சிகம்: உற்சாகம் பறக்கும். துன்பம் பிறக்கும் பணமுடையும் தீரும். அடக்கம் நன்று.

தனுசு: அற்பவிடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள், செய்தொழில் நஷ்டமுண்டு. குடும்பப்பிரிவுமுண்டு.

மகரம்: குடும்ப சேர்க்கையுண்டு. குறிக்கோள் வெற்றியுண்டு. தொழில் முயற்சியுமுண்டு.

கும்பம்: பிரிவுத்துயர் வாட்டும், சூழ்ச்சி வலைவிரிக்கும்.

(7ம் பக்கம் பார்க்க)

## முதலாண்டு நினைவஞ்சலி



செல்வன்
க. கந்தவனம்
நந்தகோபால்

அன்னை மடியில்:
27-04-1963

ஆழியின் அணைப்பில்:
18-10-1986

திதி: 06-11-1986

அறிவறிந்த நன்மகனாய் அவனிதனிலே பிறந்து உறவினரின் நண்பர்களின் உள்ளமதில் உயர்வுற்று பெறலரியபெருமகனாய்ப் பெயர்பொலியும் நந்தகோபால் நறுமலராய்க் கனியாது நம்பனடி நாடினனே எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் கண்ஒளி வீசி எம்மையெல்லாம் வழிநடத்தி எமது எதிர்காலம் ஒளிமயமாய் அமைத்திடவே வேற்றுநாடது சென்று உடல் வெம்பி உழைத்த எம் அன்புச் செல்வமே, உமது லட்சியக்கனவது நனவாகும் வேளையில் மின்னுமல் முழங்காமல் கண்ணிமைக்கும் வேளையிலே சிங்கை மாநகரில் கடல் அன்னைமடியில் கண்ணதனை மூடிக்கொண்டு எமதுஇதயம் தனைப் பிழிந்து கொண்டு எங்குதான் சென்றனையோ எம் அன்புத் தெய்வமே எவ்விடமென்று தேடிடுவோம் உனை? கணமாகே சூட்டவெண்ணி மகிழ்வுடனே நினைத்திருந்தோம். அமங்கலமாய் நீ அங்கோ அழிந்துவிட்டாய். எம்முயிரே காலங்கள் உருண்டோடலாம். கார்முகிலும் மறைந்தோடலாம்; ஆனால் நீவிட்டுச்சென்ற அன்பு, பாசம் என்றும் அழியாத சுவடுகளாக எமது இதயத்தில் நீங்காது நிலைத்திருக்கும். உமது ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை இறைஞ்சுகின்றோம்; உமது பிரிவின் வெற்றிடத்தை நிரப்பமுடியாது தவிக்கும் தாய், தந்தை, சகோதரி, சகோதரர்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்;

கொத்தாவத்தை,
வல்வெட்டித்துறை.

[C 5598]


## பிரயாண ஒழுங்குகள்

குவைத் - சுப்பர் மார்க்கட் ஒயில் கம்பெனி

குவைத், சிங்கப்பூர் } பணிப் பெண்கள்

அவுஸ்திரேலியா, நோர்வே

ஆகிய நாடுகளுக்கு குறைந்த கட்டணத்துடன் பயண ஒழுங்குகள்.

பாஸ்போட், விசா, பொண்ட், ரிக்கற் யாவும் துரிதகெதியில் செய்துகொடுக்கப்படும்.

**ரஜீவன் ட்ரவல்ஸ்,**
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

[A-2844]



வாடிக்கையாளர்கள், வியாபாரிகள்
கவனத்திற்கு

1-11-86 தொடக்கம் காங்கேசன்துறை - மாவிட்டபுரம் ஆகிய இடங்களுக்கு தோலகட்டி தயாரிப்புகளின் மொத்த சில்லறை வியாபாரிகளாக

**குமரன் ஸ்டோர்ஸ்**
K. K. S. வீதி,
(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன முன்பாக)
காங்கேசன்துறை

என்பவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்;

**ஜோ. எகட்டன்,**
**செனித் மார்கட்டிங்**
**அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,**
யாழ்நகர்.

(A 2846)



## பிரயாண ஒழுங்கு

டென்மார்க், கனடா, மேற்கு ஜேர்மனி, லண்டன், பிரான்சு, ஹொலண்ட் ஆகிய

நாடுகளுக்கு வேலை வாய்ப்புடனும், வேலை வாய்ப்பின்றியும் அழைத்துச்செல்லப்படும். எங்களுடைய முதல் பிரயாணம் மானிப்பாய் காரியாலத்திலிருந்து 14ம் திகதி அழைத்துச்செல்லப்படும். பயணம் செல்ல விரும்புபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**P. V. S. Vaikunthan**
**UNILANKA MANPOWER TRAVELS**
Kanagasabai Road, Manipay.

[C 5596]

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மோசடியொன்றில் மாட்டிக் கொள்ள நேரிடும், கவனம் வேண்டும்.

மீனம்: பொறியியலாளர்கள் போற்றப்படுவார்கள், தொழில் துறையில் ஒத்துழைப்புக் கிடைக்கும். குடும்ப மகிழ்ச்சியுமுண்டாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அறிவித்தல்

திருமலையைச் சேர்ந்த செல்வம் என்பவர் தமது தயாரான லட்சுமியைத் தேடுகிறார்: இவர் காலஞ்சென்ற கந்தையாவின் மனைவியான லட்சுமியை சிறுவயதிலேயே பிரிந்தவராவார்.

தகவல் தெரிந்தவர்கள், பங்குத்தந்தை,புனித அந்தோனியார் ஆலயம்,சுன்னாகம், சந்திரசேகரம், சிறிமுருகன் கபே,மாவிட்டபுரம்:, ஹோம் கிப்பின் என்ஜினியர்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை, ஆகிய முகவரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

C 5609

## கடைசி நேர வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சிற்றம்பலம்; மாணிக்க வாசகர் சங்கானை வடக்கு பண்டத்தரிப்பு என்பவருடைய அடையாள அட்டையும், டிறைவிங் லைசென்சும் சிறிய பேர்சுடன் பண்டத்தரிப்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும், இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள்: கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். A. G. எலக்ரிக்கல்ஸ் ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம். [C 5609]

### வகுப்புகள்

A/L 87 துரிதமீட்டல்வகுப்புகள் பல வருட அனுபவமிக்க பிரபல விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் இணைந்து நடாத்துகின்றனர் தாவரவியல் திரு. சிவ வீரசிங்கம், விலங்கியல் திரு: தம்பிராஜா, தூய பிரயோக கணிதம் திரு; பிரேம்நாத் பௌதிகம் திரு: ரவீந்திரநாதன் இவ்வகுப்புக்கள் 11 - 11 - 86 செவ்வாய்கிழமை 2:30 P. m ஆரம்பமாகவுள்ள பிரபல்ய துரிதமீட்டல் இரசாயன வகுப்புகளுடன் இணைந்து ஆரம்பமாகவுள்ளன. 3ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (P. m; C. முன்பாக):

(C 5605)

### வெலிங்டன்

திரையில்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதிகா
கவுண்டமணி
கல்லாப்பெட்டி சிங்காரம்
நடித்த
நிலவு சுடுவதில்லை
(கலர்)

இன்று முதல்
லிடோ
10-30, 2-30, 4-30, 6-30
**Nut Cracker**
Strictly for Adults only
[Colour]

## உலக அரசியல்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

லை இந்தியா தலைநிமிர்ந்திருப்பதை எவரும் இருட்டடிக்க முடியாது; ஆனால் பஞ்சாப் பிரச்னை தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கும், மதசார்பற்ற ஆட்சி முறைக்கும் பெருத்த சவாலாகவே தொடருகின்றது.

இந்த நிலைமையில் வெளிநாட்டுத் தொல்லைகளைத் தீர்க்கும் ஆற்றல், நீந்தத் தெரியாது தத்தளிப்பவன் நீரில் மூழ்கும் இன்னொருவனின் உயிரைத் தப்பவைக்க முயல்வது போலாகும்.

### இரண்டாவது சார்க் உச்சிமாநாடு

இம்மாத நடுவில் பங்களூரில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சார்க் (SAARC) மாநாடு எவ்வகையிலும் எதிர்பாராத வெற்றியளிக்குமா?

பட்டுக்கும், பௌதிக ஆராய்ச்சிக்கும், புகழ்பெற்ற சுகம் பேசும் சுவாத்தியமுடைய நகரமே பெங்களூர். அங்கு கூடும் ஏழு நாடுகளின் தலைவர்களுக்கும் மனச்சாந்தி அளிக்கும் தனித்துவம் பெற்றது இது.

பிணக்குறும் தலைவர்கள் ஒருவரை ஒருவர் நேரில்சந்தித்து அந்நியோன்யம் கொண்டாட முடியுமானால் அற்புதத்திற்கு இடமுண்டு.

அதைவிட்டு, ''பயங்கரவாதம்''என்பதற்குவரைவிலக்கணம் காணமுயன்றால், நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்க்கும் வீண் ஆராய்ச்சியில் காலங்கழிப்பதாகும். நல்நோக்கத்துடன் பிடித்த பிள்ளையார் பெருச்சாளியாக மாறுவது திண்ணம்;

பஞ்சாப் படுகொலைகளுக்குப் பாகிஸ்தான் காரணம்; பாகிஸ்தானில் நடைபெறும் கலவரத்திற்கு இந்தியா காரணம். இலங்கைத் தமிழரின் 'பயங்கரவாதத்திற்கு' இந்தியா காரணம்; பங்களாதேஷ் ஷெரில்லாப் போராட்டத்திற்கு இந்தியா உதவுகிறது - இவை போன்ற முடிவற்ற முறைப்பாடுகளால் உலகின் கால்பங்கு மக்கள் வாழும் தெற்காசியாவிற்கும் அதன் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் உதவஆரம்பமான இந்த நிறுவனம் பிசுபிசுத்துப்போகும்.

பல நூற்றாண்டுகளாக அடிமைப்பட்ட இம்மாபெரும் கண்டம் உயர்வதற்கு ஐரோப்பா, அமெரிக்கா உதவுமா? சீனா, ஜப்பான் சிறப்புடன் விளங்கினாலும், ஆசிய பண்பாட்டையும் பெருமையையும் பெருநோக்கமாகக் கொள்ளவில்லை.

### தென்கொரியா

அண்மையில் நடந்தேறிய ஆசிய விளையாட்டுப் போட்டியில் பிரபலம்பெற்ற தென்கொரியாவின் முதலாளித்துவ ஆட்சி, இன்று அதன் பல்கலைக்கழக ஆட்சேபகாரி மாணவ கிளர்ச்சியினால் அல்லோலகல்லோலப்பட்டிருக்கிறது;

பொலிஸ் ராணுவ அடக்குமுறையால் ஆயிரக் கணக்கான தீவிர மாணவர் வன்முறைப் போராட்டத்தை அடக்கிவிட முடியவில்லை; அமெரிக்கா பிரிட்டன் என்ற இவ்விரு நாடுகளின் கைப்பொம்மையாக இன்றைய ஆட்சி இருப்பதாகவும் கடந்த கொரியன் யுத்தமும், அதனால் உண்டான நாட்டின் பிரிவினையும் அமெரிக்காவின் ஆதிக்கத்தால் நிகழ்ந்தவை என்பது மாணவர் பிரசாரம் கம்மியூனிஸ்ட் ஆட்சியை உருவாக்கி கொரியாவை ஒன்றுபடுத்த முயல்வதே இக்கிளர்ச்சியின் அடிப்படை நோக்கம்.

அமெரிக்கா, தென்கொரியாவிற்கும் ரஷ்யா வடகொரியாவிற்கும் தூபமிட்டு அரசியல் ராணுவ தலையீடும் காட்டிலோ உலகிலோ அமைதி காண்பது அரிது.



### ஓராண்டு நினைவஞ்சலி

செல்வன் சுதர்சன் சுந்தரலிங்கம்

மலர்வு: 20-04-80
உதிர்வு: 18-10-85
திதி: 6-11-86

ஐந்து வயதினிலே
அறியாப் பருவத்திலே
கொஞ்சும் மொழிபேசி
குலவிவரும் வேளையிலே
பதுனெட்டாம் திகதி
பயணம் சொல்லிப்
பள்ளி சென்றாய்
பண்பாகப் பல கலைகள்
பயின்று நீ திரும்புகையில்
பொல்லாத காலன் தன்
கணக்கை முடிக்கஎண்ணி
பாதிவழியில் உன்
பாதையை மாற்றி
விட்டான்
சொல்லாமற்
கொள்ளாமல் உனை
அழைத்துச் சென்று
விட்டான்
சென்றஇடத்தில் நீ
தங்கி விட்டாய்
தந்தையுடன்
சிந்தை தடுமாறி இங்கு
பெற்றவளும் புலம்புகிறாள்
சேர்ந்து விளையாட
சின்னவனும் தேடுகிறான்
உன் முகம் காணாமல்
உற்றாரும் உறவினரும்
நண்பர்களும்
தவிக்கிறார்கள்
காலமெல்லாம் உன்
நினைவு அழியாது
கவலைகளும் இப்பிறப்பில்
தீராது;
பிரிவால் துயருறும்:
அம்மா, தம்பி, உற்றார்,
உறவினர்.

சுதர்சன் இல்லம்,
மல்லாகம், (C 5606)



### நினைவஞ்சலி

இராசையா
காண்டீபன்

23-09-1986 அன்று அகால மரணமடைந்த எங்கள் அன்புச்செல்வனின் அந்தியேட்டி வீட்டுக்கிரியை 6-11-86 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில்நடைபெறும்.

அஞ்சாத நெஞ்சமுடன் தம்பியுடன் ஆரம்பகால முதலுன் கண்துஞ்சாது நீர் புரிந்த நெடுஞ்சமர் கண்டு நாம் நெஞ்சார வாழ்த்தியுமை ஏத்தியதை மறந்து வஞ்சகத்துளார் வாழுமிந்த பூவுலகைத்துறந்து நஞ்சகத்திலார் வாழுகின்ற நல்லுலகு நோக்கி தஞ்சமென்று நாமிருக்க தாழ்பணியத் தானிருக்க வெஞ்சமர் செய்த நின் வீரமும் விளைநிலமாக்கு முன் தீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடா அங்குசென்றாய்.

குடும்பத்தினர்,
நண்பர்களும்;

நாயன்மார்கட்டு.
(C 5616)

## காட்டிக்கொடுக்கும் துரோகச் செயலில் ஈடுபட்டவருக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், வியா.

மாங்குளம் இராணுவ முகாமை விட்டு கடந்த பல மாதங்களாக இராணுவத்தினரை வெளியேறவிடாது தடுப்புக்காவலிலீடுபட்டு வரும் தமது மக்கள் விடுதலைப்படையினது நடமாட்டங்களையும் காவல் நிலைகளின் இருப்பிடங்களையும் ஸ்ரீலங்காஇராணுவத்தினருக்கு காட்டிக்கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் லிங்கம் என்றழைக்கப்படும் மருதை இராசலிங்கம் [வயது 39] என்பவருக்கு மரண தண்டனை வழங்கியதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது;

மேற்குறிப்பிட்ட நபர் தேசத்துரோக செயல்களைப் புரிந்ததற்கான தகவல்கள் ஆதாரபூர்வமாகக் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே நேற்று முன்தினம் மரணதண்டனை வழங்கப்பட்டதாக அவ்வறிக்கை கூறுகிறது,

மேலும் இந்த நடவடிக்கை, இதுபோன்று இராணுவ முகாம்களுடன் தமது அனுமதியின்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு வைத்திருப்பவர்களுக்கு முன்னெச்சரிக்கையாக அமையும் என்பதை எடுத்துக் காட்டும் விடயமாகக் கருதுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[மா]

## அவசர பொதுக்கூட்டம்

யாழ்: மத்திய கல்லூரியின் அவசரப்பொதுக்கூட்டம் 8-11-86 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். பாடசாலையின் எதிர்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதால், சகல பெற்றோர்களும் ஆசிரியர்களும் தவறாமல் சமூகம் தருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

வே. பாலசுந்தரம்
அதிபர்;

எஸ். தவலிங்கம்
செயலாளர் பா. ஆ. சங்கம்;

[C 5608]

## Institute of Engineering Technology

K: K: S: Road, CHUNNAKAM;

12 வருட அனுபவமுடைய தொழில் கல்வி நிலையம்

- ★ மோட்டார் மெக்கானிஷம்
- ★ எலக்றிக்கல் வயறிங்
- ★ ஓட்டோ வயறிங்
- ★ வெல்டிங்
- ★ வைண்டிங்
- ★ டிராவ் மென்ஷிப்
- ★ றேடியோ ரி; வி

பயிற்சி ஆரம்பம்: 10 - 11 - 1986

[C 5601]

உணவுக்கான சுவாதாரமான
பல்வேறு இறைச்சி வகைகள்

உடன் உரிக்கப்பட்ட
புரொயிலர், கறிக்கோழி,
இறைச்சி வகைகளும், சுவாதார முறைப்படி
வளர்க்கப்பட்ட பன்றி இறைச்சி
நியாய விலையில் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| புரொயிலர் | 1 kw. | 58-00 |
| கறிக் கோழி | 1 kw. | 50-00 |
| பன்றி இறைச்சி | | 25-00 |

Keels உற்பத்திப் பொருட்கள்

சகல இறைச்சி வகைகளும் தினசரி
எமது பண்ணையில் இருந்து வருகின்றன.

## வரணி
## மிஷன் பண்ணை

145, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
போன்: 24072

[A-3067]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வியாழக்கிழமை 6-11-86

## யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் 5ம் வகுப்பு புலமைப்பரிசில் சாதனை

யாழ்ப்பாணம், வியாழன்: கடந்த சனிக்கிழமை வெளியான 5ம் வகுப்பு (6ம் ஆண்டு) புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தியடைந்த 63 மாணவர்களில் 21 மாணவர்கள் யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்களாவர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் அதிகப்படியான மாணவர்கள் சித்தி பெற்ற பெருமை இவ்வித்தியாலயத்துக்கே உரித்தாகும்.

# "இராணுவத் தாக்குதலால் பாதிப்படையும் எமது இறுதி ஆண்டுப் பரீட்சைக்கு அரசே பொறுப்பாளியாகும்"

## யாழ்.மருத்துவபீட மாணவர் அமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம் வியாழன்

"இன்றைய நிலையில் நாங்கள் செய்முறை பயிற்சிவகுப்புகளுக்கு செல்லமுடியாமலுள்ளது. இந்நிலை தொடருமானால் இறுதியாண்டுப் பரீட்சைகள் ஒத்திப்போட வேண்டிய நிலை உருவாகும். இதற்கு அரசே பொறுப்பாளியாகவும் அமையும். எனவே யாழ். வைத்தியசாலை சுற்றுடலை நோக்கி இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்குமாறு மனிதாபிமான ரீதியில் வலியுறுத்திகேட்டுக் கொள்கிறோம்."

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். மருத்துவபீட மாணவர் அமைப்பு, யாழ். பல்கலைக்கழகமருத்துவபீடாதிபூடாக ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கடந்த செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களில் ஆஸ்பத்திரி கட்டிடங்கள் மீது 'ஷெல்' தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து ஆஸ்பத்திரி மீது ராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது எனக்கோரி உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கண்டனக் கடிதம் அனுப்பியதுடன் எமது குறைகளை உபவேந்தரிடம் சமர்ப்பிக்குமுகமாக ஊர்வலம் நடாத்தினோம்.

அத்துடன் கடந்த மாதம் 24ம் திகதியன்று யாழ் மருத்துவபீடத்தைச்சேர்ந்த திரு. எம். குமாரசிங்கம் என்பவர் ஆஸ்பத்திரி நுழைவாயில் அருகில் வைத்து கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் விழுந்து வெடித்தன் காரணமாக படுகாயமடைந்தார்.

"இதுபோன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளின் காரணமாக இனிமேல் ஆஸ்பத்திரி சுற்றுடலில் ராணுவத்தாக்குதல் மேற்கொள்ளப்படமாட்டாது என உறுதியளிக்கப்படும் வரை வேலைநிறுத்தம் செய்வதென ஆஸ்பத்திரி ஊழியர்கள் தீர்மானித்துள்ளன.

மேற்படி மகஜரின் பிரதிகள் பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுத்தலைவர், போதனா வைத்தியசாலைகள் அமைச்சர் உட்பட மருத்துவதுறை சார்ந்த பல்வேறு அமைப்புக்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (எ-ஊ)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சுப்பிரமணியம் (இராவணன்) - அராலி தெற்கு

அராலி தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை சுப்பிரமணியம் 5-11-86ல் காலமானார். இவர், வடபகுதி போக்குவரத்துச் சபை ஊழியரும், பவாவின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (6-11-86) நண்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர்.

[C-5614]

### இராசையா துரைராஜா (பயில்வான் ஆனைப்பந்தியடி கராஜ்)

கச்சேரியடி இராசையா துரைராஜா காலமாகிவிட்டார். இவர் காலம் சென்ற இராசையா தங்கம்மாவின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், உமா, ரகுநாதன் (டென்மார்க்), உஷா, இராமநாதன், ரங்கநாதன், சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இலட்சுமிகாந்தன், ஜெயகாந்தன், விஜயகாந்தன் ஆகியோரின் மைத்துனரும், பரமேஸ்வரியின் சகோதரனும், சிங்கராஜாவின் மைத்துனரும், பிரேமா, பாமா, வசந்தி, இராசதுரை, இராஜகுமார், சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 6-11-86 வியாழக்கிழமை (இன்று) காலை 9·00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ரகுநாதன்

(C-5604)

### திருமதி அப்பையா நாகரத்தினம்

சுதுமலை தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பெஞ்சனியர் குழந்தைத்தம்பி அப்பையாவின் அன்பு மனைவி அப்பையா நாகரத்தினம் காலமானார். இவர் கட்டியாவ அரசினர் வைத்தியசாலை டாக்டர் மதனசேகரன், முன்னைநாள் வேலணை பெருந் தெருக்கள் திணைக்களம் தற்போது காங்கேசன்துறை உணவுத் திணைக்களம் களஞ்சியப் பொறுப்பாளர் நற்குணசேகரன். திருமதி தவராணி சிவப்பிரகாசம், திருமதி சந்திராதேவி சின்னையா ஆகியோரின் அன்புத் தாயாரும், கொழும்பு 'இறெவலீர்ஸ்' வங்கி முன்னைநாள் முகாமையாளர் திரு. சிவப்பிரகாசம், காங்கேசன்துறை 'லங்கா சிமெண்ற்' லிமிட்டெட் திரு. சின்னையா, திருமதி பத்மாவதி மதனசேகரன், திருமதி இராஜேஸ்வரி நற்குணசேகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இராமநாதன், அழகப்பெருமாள், பரமநாதன், திருமதி தங்கமணி தேவராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சஜனன், ஜெனனன், மாதினி, கஜனி, நியோஜினி, சிவபிரசாத், வாசுகி, ஆனந்தி, பாமதி, பகிரதன், பாரதி, பகிரதி ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார். அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று (6-11-86 வியாழக்கிழமை) பி.ப 1.00 மணியளவில் சுதுமலை தெற்கு, மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காகத் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: அ. நற்குணசேகரன், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

[C 5607]

## டாக்டர்களாகும் வாரியார், கவாஸ்கர், சிவாஜி!

[சென்னை]

அண்ணாமலைப்பல்கலைக்கழகம் திருமுருக கிருபானந்த வாரியார், திரு. சுனில் கவாஸ்கர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோருக்கு கலாநிதிப் பட்டம் (டாக்டர்) வழங்கிக் கௌரவிக்கவுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ள இப்பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பட்டமளிப்பு விழாவிலேயே இப்பிரமுகர்களுக்கு டாக்டர் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

இவர்கள் தவிர தமிழக ஆளுநர் திரு. எஸ். எல். குரானா, திரு. சி. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட மேலும் ஒன்பது பேருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம்வழங்கவுள்ளதாக அதன் துணைவேந்தர் இட்டிபாபு அறிவித்துள்ளார்.

## பேராதனை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தனின் இந்த உடன்பாட்டைப் பேராதனைப்பல்கலைக்கழக செனட்டருக்குச் சமர்ப்பித்து முடிவுகளை அறிவிப்பதாக பேராசிரியர் பாண பொக்கே தெரிவித்துள்ளதாகவும் தெரிகிறது.

எழுத்துமூலமான பரீட்சைகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டாலும், விஞ்ஞானத்திற்கான செயல்முறைப் பரீட்சைக்கு பேராதனைப்பல்கலைக்கழகம் செல்லவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவாரிப் பட்டப்பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு நீண்டகாலமாக கோரிக்கை விடப்பட்டது தெரிந்ததே.

வெளிவாரிப்பட்டப்படிப்புகளின் இறுதிப்பரீட்சை அடுத்த மாதம் முதல்வாரந்தொடங்கி நடைபெறும் எனவும் தெரிகிறது. [வா]

## பாதுகாப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவும் பொலிஸ் திணைக்களத்திற்கு 160கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மிகுதியாகவுள்ள 380 கோடி ரூபா பாதுகாப்பு அமைச்சு பெறுகிறது.

## இன்று குடாநாட்டு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன் பேச்சுவார்த்தை நடத்தியபோது வேண்டுகோள் விடுத்திருந்தனர். மேற்கொண்டு எத்தாக்குதலும் கல்லூரிகள் மேல் நடைபெறாதென்று அந்த அதிகாரி உறுதி அளித்திருந்தார்.

இந்த வாக்குறுதியை மீறி கடந்த 30ம் திகதி யாழ். கோட்டை முகாமிலிருந்து இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு கடமை உலருந்த யாழ். மத்திய கல்லூரி மாணவதலைவன் விபுலானந்தன் இலக்காகி மரணமானார்.

இந்தப் பயங்கரசம்பவம் முழு மாணவ உலகுக்குமே பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் மேலும் நிகழாமல் இருப்பதற்கும், மேற்குறிப்பிட்ட கல்லூரிகளின் மாணவர்கள் தங்கள் கல்வியை தொடர்ந்து பயிலவும் ஒரே ஒரு வழி யாழ். கோட்டையிலிருந்து இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டுமென்பதேயாகும்."

இவ்வாறு எழுதப்பட்ட மகஜர்களே யாழ். கல்விப்பணிப்பாளரிடமும் யாழ். அரசாங்க அதிபரிடமும் மாணவர்கள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இது இவ்வாறிருக்க யாழ். மத்திய கல்லூரி மாணவ தலைவனின்மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ். குடாநாடெங்கும் நேற்று சகல பாடசாலைகளும், தனியார் கல்வி நிலையங்களும் மூடப்பட்டு பூரணதுக்கம் அனுஷ்டித்தது குறிப்பிடத்தக்கது. [மா]

## படையினர் சூட்டுக்கு போராளி பலி

யாழ்ப்பாணம், வியா.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெள்ளையடி மடுப்பகுதியில் ரோந்து சென்ற கமாண்டோக்களை எதிர்பாராதவிதமாகச் சந்திக்க நேர்ந்த விடுதலைப் புலிகளைச் சேர்ந்த இரு போராளிகளில் ஒருவர் பலியானார்; மற்றவர் காயமுற்றார்.

கடந்த மாதம் 27ம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம்பற்றித் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில், வீரமரணமடைந்த ஞானம் (மூதூர்) என்பவருக்குத் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## தமிழ்ப் பகுதி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவநடவடிக்கை எடுக்க இலங்கை அரசு முயன்று வருவதனையே காட்டுகிறது.

இவ்வாறு இலங்கை அரசு தமிழ் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது தமிழ்நாட்டின் உணர்வலைகளைத் தூண்டுவதுடன் இந்திய அரசை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளும் என்றும் பி. பி. சி. தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்து கொள்ளத் தயார் என போராளிகள் ஒழுங்கள் இந்திய தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளதாகவும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது. (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா சோமசுந்தரம் (சுருவில்)

சுருவிலைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சோமசுந்தரம் காலமாகி விட்டார். இவர் சுருவில் ஸ்ரீமன் கந்தோவிக்க பாடசாலை அதிபர் திரு. சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், விமலேஸ்வரன் (லண்டன்), மணிவண்ணன் (கனடா), ரதி (லண்டன்), திருமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், மன்மதராஜா (பொறியியலாளர் லண்டன்) அவர்களின் அன்பு மாமியும், லவன் (லண்டன்) அவர்களின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற திருமதி கெசவள்ளியம்மா வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, காலஞ்சென்ற திருமதி மனோன்மணி செல்லப்பா, காலஞ்சென்ற தில்லையம்பலம், திருமதி யோகம்மா நல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம், திருமதி சிவக்கொழுந்து தம்பிப்பிள்ளை முருகேசு, சுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (6-11-86) மாலை 3 மணியளவில் சுருவில் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுருவில், ஊர்காவற்றுறை.

பொ. சோமசுந்தரம்.

[C 5617]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P.O. Box 49. Telegram, Eelanadu Telephone: 22389—24126